ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௯.	ஆங்கீரஸ ௵ ஆனி ௴	பகுதி ௬.
Vol. 9.	June & July 1932.	**No. 6.**

பண்ணுருட்டி

ஸ்ரீ வைஷ்ணவ மகாநாடு.

இம்மகாநாடு பண்ணுருட்டி ஸ்ரீமத் இராமாநுஜ நாவலர்ஸ்வாமிகள் சபையின் 7-ம் வருடவிழாவில் சபை சார்பாக (27-3-32)ல் சென்னை யூனிவர்சிடி லெக்சரா ஸ்ரீமான். வேங்கடராஜுலு ரெட்டி காரு தலைமையின் கீழ் இனிது நடைபெற்றது.

காலை 5-மணி முதல் ஸ்ரீமத சபையாரால் ஸ்ரீமதித்யாதி இராமாநுஜ நாவலர்ஸ்வாமிகள் திருநக்ஷத்திர பரிபாலனம் இயல்சாற்று முறையுடன் நடந்து தெய்வத் தமிழ்ப்ரபந்த பண்ணிசை கோஷ்டிகளோடும் ஸ்வாமிகள் திருவுருவப்படம திருவீதிப்புறப்பாடு முதலானவை செவ்வனே 12-மணி வரையில் நடைபெற்றன. அதற்குமேல் ததீயாராதனை முடிவுற்றது.

பிற்பகல் மணி 2½-க்குமேல் கோஷ்டிகளுடன் மாலை மரியாதை கொண்டு சபையார், ஸ்ரீமான் (வித்வான்) வேங்கடராஜுலு ரெட்டி காருவை அக்கிராசனம் அமருமாறு விரும்பி சபைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

பண்ருட்டி ஹைஹஸ்கூல் வித்வான் ஸ்ரீமான் கோ. சுந்தரராமாநு ஜனுநாயுடுகாரு அவர்கள் தலைவரது கல்வி ஒழுக்கம் உத்தியோகம் முதலானவற்றை நன்கு விளக்கிவரவேற்றார்.

தலைவர் முன்னுரை முடிந்தவாறே பண்ருட்டி ஹைஹஸ்கூல் தமிழாசிரியர் வித்வான் ஸ்ரீமான் புருஷோத்தமநாயுடு அவர்கள் "வைஷ்ணவமும், பண்டைத்தமிழ்நூல்களும்" என்னும் விஷயத்தைப் பற்றி அரிய சொற்பொழிவொன்று நிகழ்த்தினர். (இன்று செய்த பிரசங்கங்களின் நல்லுரைகள் நல்ல கருத்துக்களைக்கொண்டிருப்பதோடு மக்கள் ஆராய்ச்சிக்கு அவசியமாதலாலும் இங்கு கூடுமான வரை அவை விவரிக்கப்படுகின்றன:—)

அவர் செய்த உபந்யாசமாவது :—

வைஷ்ணவமென்பதற்கு விஷ்ணுசம்பந்தமுடையதென்பது பொருளாம். விஷ்ணு என்ற பதம் எங்கும் நிறைந்தவன் என்பதைக் குறிப்பிடும். விஷ்ணு அல்லது இறைவன் என்றும் பலர் கூறுவர். இறைவன-எங்குந்தங்குபவன். அதனால் இதுவும் விஷ்ணு என்ற பதமும் ஒரு பொருளாமென்பதில் ஐயமில்லை. ஆதலால் விஷ்ணு என்பது எங்கும் நிறைந்த கடவுளின் பெயரைக் குறிப்பிடுவதாகும், உலக மக்கள் அறிந்தோ அறியாமலோ எக்கடவுளைத் தொழுதாலும் அத்தொழுகையின முடிவு எங்கும் நிறைந்த திருமாலைச்சாரும் என்பது துணிபு.

இங்ஙனம் எங்கும் நிறைந்த இறைவனை திருமால் வழிபாடு பண்டைக்காலததில் யாண்டும் பரவியிருந்ததாவென்பது? கேள்விக்குறியாகும். ஆம். அதற்குச்சான்று பல உள. பண்டைய நூல்களில் திருமால் அவதாரமான ஸ்ரீராமநாமத்தைப்பற்றி கூறவில்லை. கண்ணன் புகழைப்பற்றியே நூல்களில் கூறப்பட்டிருக்கிறதென்பது சிலர் வாதம். இராமன் ஆரியனுதல்பற்றி தமிழ் நூல்களில் அவனது புகழ் குறிப்பிடவில்லையென்பது அவரது கொள்கை. அது பொருந்தாது. இராமனைப்பற்றி "அகநானூறு" என்ற நூலிலுள்ள "வென்வேற்கவுரியர்" என்ற பாடலில் "வெல்போர் இராமன்" என்று குறிக்கப்பட்டிருப்பதை யறிவாராக. ஸ்ரீராமன் விருத்

தார்தம் அகநானூறில் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றி "அண்டர்மகளிர்" என்ற செய்யுளில் கிருஷ்ணன் துகில்கொண்டது முதலியவற்றைப் பற்றிக் கூறும் செய்யுள் காண்கிறது. (சங்க நூல்கள் ஆதாரம்) வைணவ க்ஷேத்திரங்கள் நூற்றெட்டினுட் பலவற்றைப்பற்றிச் சங்கநூல்களில் காணலாம். "பெருந்தேவனார்" தாம் பாடிய 'பாரதத்தில்' முன்பாக "தேனோங்குசோலைத் திருவேங்கடம் தானோங்கும் தென்னரங்கம், திருமால் சோலைமலை திருவொற்றியூர் நாமம் சொன்னவர்க்குண்டோ துயர், என்றும், சிலப்பதிகாரம் என்ற அரிய நூலில் கோவலன் ஒரு பிராமணனை வழி கேட்க; பிராமணன் தான் மாங்காடு என்ற ஊரிலிருந்து காவிரிநாதனமரும் ஸ்ரீரங்கத்தைப் பற்றியும் திருவேங்கடத்தைப் பற்றியும் புகழ்ந்து கூறி அங்கு போவதாகக்கூறிப்போந்தான். மேலும், பிராம்மணன் மதுரைக்கு வழிகூறும்போது, அழகர் பெருமையைக்கூறி அவ்வழியாகப்போகச் சொல்லுகிறான். தொல்காப்பியத்தில் ஆசிரியர் தமிழ் நாடு எல்லைகூறுங்கால் வடவேங்கடமுதல் தென்குமரிவரையென்று குறிப்பிடுகிறார். திருவேங்கடமெனில் பாமரர்களும் அதன் பெருமையை நன்குணர்வார்கள். "புறப்பொருள் வெண்பாமாலையில்" "வெறிகொள் அறையருவி வேங்கடத்துச்செல்லின்" எனக்கூறியிருத்தலையும் கவனித்தல்வேண்டும். சிவப்பிரகாசர், தாம் இயற்றிய காளத்திபுராணத்தில் திருவேங்கடம் திருமலர்சோலை முதலியவைகளைப்பற்றியும் கூறுவதையுங்காணலாம். இதுபோது சிலர் திருவேங்கடம்; திருமலர்சோலை முதலிய க்ஷேத்திரங்கள் சுப்பிரமணியக்கடவுளுக்குரியதாகஇருந்தன என்று கூறுவர். சிலப்பதிகாரம்பாடியவர் 'ஜைனர்' சிவபிரகாசர் 'சைவர்'. வைணவப்பெரியார்கள் சொல்வதைவிட வைணவசமயத்திற்கு புறம்பேயுள்ள இருவர் சொல்வது தக்க ஆதாரமன்றோ. "மடந்தாளும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம் கடந்தானை ஏத்தாத காநாராயணனை ஏத்தாத நா என்ன நா" என்றும், "பெரியவனை மாயவனை கரியவனைக்காணுதகண், என்ன கண்" எனவும் சிலப்பதிகாரம் புகலும். தொல்காப்பியமாகிய ஆதி இலக்கணத்தில் "மாயோன்மேய காடுறைமுல்லை" என்று கூறுகிறார். முல்லையென்பது கண்ணனைக் குறிக்கும். மேலும் தொல்காப்பியத்தில் வைணவச்சின்னங்களையும் கூறியிருக்கிறார். மேலும் "திருக்குறளில்

பொருட்பாலில் "மடியிலாமன்னவனெய்தும் அடியளந்தான், தாய தெல்லாம்" எனும் குறளேயும் காணலாம். திருக்குறளில் முதலில் "ஆதிபகவன் எனக்கூறிய மொழிகளின் கருத்தென்னவெனில்; பகவன் அடியார் - பாகவதர். பகவானுடைய பெருமையைக்கூறுவது பாகவதம். இவைகளிலிருந்து விஷ்ணுவின் கூற்றுகளைத் திருக்குற ளாசிரியர் எடுத்தாண்டிருக்கிறார். இவைகளினல் அக்காலத்தில் வைணவசமயம் எங்கும் பரவியிருந்ததென்றும் தெற்றெனத்தெரிகி றது. வைணவ சமயத்தில் வழங்கப்பெறும் தத்துவங்கள் 25 ஆகும். வைணவ தத்துவங்களைச் சங்க இலக்கியங்களில் விளரமாகக் காணி லாம். திருக்குறளருளிய பெரியார் தமது குறளில் இந்த 25 தத் துவங்களையும் ஆங்காங்கே எடுத்தாண்டிருக்கிறார். உலகினர்க்கு வேண்டிய முக்கிய விஷயங்கள் அனைத்தும் இந்த இருபத்தைந்து தத்துவங்களில் அடங்கியிருக்கின்றன. ஆதலால் பண்டையகாளில் வைணவசம்பிரதாயம் நம் நாட்டில் அதிகமாகப் பரவியிருந்ததென் பதற்குச் சந்தேகமில்லை என சபையினர் வியக்க நுட்பமாகவும் விளக்கமாகவும் எடுத்தியம்பினர்.

பின் நெல்லிக்குப்பம் இளைஞர் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் இரத்தினராமாநுஜ தாஸர் "மனிதனும் கடமையும்" என்பது பொருளாகக்கொண்டு பேசினர். மனித உடல் அரிதென்று பெரி யோர் கூறுவதுண்டு. உயிர் சித்துப்பொருள். உடல் அசித்துப் பொருள். சித்துப்பொருளும் அசித்துப்பொருளும் உறவு கொண் டாடுதல் எங்ஙனம் என்பது வினு? உடல் சடப்பொருள். உயிர் தானே இயங்கும் பொருள். பெரும்வித்தியாசம்கொண்ட இவ்விரு பொருளும் எங்ஙனம் உறவு கொண்டாடி ஒன்றுகப்பொருந்தியது என்ற பெருங்கேள்விக்குக் கடவுள் செயல் என்பதே விடையாம். உடலுக்கு உயிர் ஆதாரம். இவை இரண்டிற்கும் ஆதாரம் கடவுள். ஆக கடவுளின் இலட்சியம்,ஆன்மாஈடேறற்பொருட்டே இவவுடல் அளிக்கப்பட்டுளதென்பதாம். அதனல் உயிருக்கு உடல் பெருந் துணையாகும். இவ்விதமாகவந்த மனிதனின் கடமை என்னவென் பதை ஆராயவேண்டும். மனிதர்கள் பகவந்மாயையிற் கட்டுண்டு இன்னதுதான் செய்யத்தக்கதென்பதறியாது உழன்று திரிகின்ற னர். ஒரு அம்மையார் தனது புதல்வனை காயும் நெல்லைப் பார்த்

திருக்கும்படி ஒரு கோலைக் குழந்தை கையில் கொடுத்துச்சென்றார். சிறிதுநேரத்தில் நெல்லை ஒரு கழுதை மேய ஆரம்பித்தது. கழுதையின் உதடுகள் அசையும் வேடிக்கையையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டதினால் நெற்போனதைக் கவனிக்கவில்லை. பிறகு தாயார் அவனைக்கேட்க இப்படிகூறினன். அதேபோல் தாரம், தனம், உத்யோகம் என்ற வேடிக்கையில் மனிதன் மனம் சென்றுவிடுகிறதால் ஆத்மஞானத்தையடைய ஹேதுவில்லாமல் போகிறது. மனிதனுக்கு ஆன்ம தாரகம், (ஆதாரம்) என்பதைவிட, சோறு தண்ணீர் ஆதாரம் என்பதைக் கண்டுகொண்டு காலங்கடத்துகிறன். சோறு மனிதன் வாழ்க்கைக்கு ஆதாரம் என்று மனிதன் கண்டாற்போல, ஆன்மாவின் இனியநிலையைமட்டும் மனிதன் ஏன் அறிந்தானில்லை; என்று ஆழ்வார் மிகவும் இரங்குகின்றார். சோறு தண்ணீர் தேடுவது மனிதன் பரம்பரை வழக்கமாகப்போயிற்று என்று வேறொருவர் கூறுகிறார். ஆக மனிதன் தன்னை யறியாமலே சில கடமைகளைச் செய்துவருகிறன். உண்டு உறங்கும் தொழிலிற்குமேல் மனிதன் நிலையென்னவெனில், கடவுளை வணங்கவேண்டியதே கடமையாகும். கடவுளை மனிதன் வணங்குமுகத்தான் தன்னிலை யுணரவேண்டும். மனிதன் தன்னிலை யுணர்வானேல், இன்னதுதான் புருடார்த்தமென்பதை நன்கறிவான். ஆதலால் மனிதன் தன்னிலையுணர்தலே, கடமையாகும்; என அழகாகப் பேசிமுடித்து சபையோர் வேண்டுகோளின்பேரில் 'பாரதத்தில், 'கிருஷ்ணன் தூது, சருக்கத்தையும் தனிபொருந்தும் சருக்கத்தையும் சுருக்கமாகப் பேசிமுடித்தார்.

பிறகு கள்ளக்குரிச்சி அன்புநிலைக்கழக ஆசிரியர் ஸ்ரீமான் இராமகிருஷ்ணசடகோபதாஸரவர்கள் "கொல்வனமுதலா அல்லன முயலும்" என்பதைக் குறித்துப்பேசினர். அமெரிக்கா முதலான மேனாட்டுப் பெரியார்கள் நம் சமயத்தின் விவரங்களை அறியாமலே அவர்கள் இயற்றியிருக்கும் நூலால் 'விசிட்டாத்வைதம்' விளங்குகின்றது. அத்தகைய விசிட்டாத்வைத பரமாசாரியாரயும், தமிழ் நாட்டுத் தலைவராகச் சிறப்பாக எந்நாட்டுத் தலைவராகவும் பொதுவாயும் இருந்த ஸ்ரீமந் நம்மாழ்வார் அருளிய "திருவாசிரியத்தில் "ஒ ஒ உலகினதியல்வே" என்பதிலுள்ள "கொல்வனமுதலா அல்

லனமுபநும்'' என்பதால் ஜீவகாருண்யத்தைப் பெரிதும் அழகாய் ஆராய்ச்சி மேற்கோளுடன் ஆங்கிலப்புலமையாளர்களின் கருத்துக் களையும் எடுத்தோதியுள்ளார். இதனை, பல்லாவரம் ஸ்ரீ வேதாசலம் என்பவர் ''மாணிக்கவாசகர் வாலாறும், காலமும்'' என்ற நூலில் 'நம்மாழ்வாரைப்பற்றி வெகுவாகக் குறைகூறியிருக்கிறாராதலால் அதைக்கண்டித்து ஒரு ஆராய்ச்சி நூல் தாம் எழுதிவருவதாயும், அதற்காக இதுவரையில் 2000 ரூபாய் செலவிட்டிருப்பதாயும் வைணவ அபிமானிகள் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதா யும் விண்ணப்பித்துக்கொண்டார்.

அதன்பின்னர் பண்ருட்டி ஹைஸ்கூல் தலைமை தமிழா சிரியர் (வித்வான்) ஸ்ரீமான், கோ. சுந்தராமாநுஜலு நாயுடுகாரு, ஸ்ரீமத் இராமாநுஜநாவலர்ஸ்வாமிகள் வைபவத்தைப் பேசினர். ஸ்வாமிகள் திண்டிவனத்துக்குச் சமீபம் ஏப்பாக்கம் எனும் சிறந்த தேசத்தில் ஜீனித்தவர் என்றும், வாசம்புதுவையம்பதி யென்றும், சென்னை, முடிச்சூர் ஸ்ரீமத் அப்பாவு முதலியார் ஸ்வாமிகள் நாலாயிரத்திவ்யப்ரபந்தத்தை முதன்முதல் நம்நாட்டுத் தமிழ் மக்களுக்கு அச்சியற்றி உதவியருளினரென்றும், பின்னர் குளே ஸ்ரீமத் அழகியமணவாளராமாநுஜ ஏகாங்கிஸ்வாமிகளும் நமது நாவலர்பிரானும் அவருக்கு உற்ற உதவிபுரியும் நண்பர்கள் என்றும், ஸ்ரீமத் நாவலர்ஸ்வாமிகள் சைவநண்பரொருவரிடத்தில் தமிழநூல்களைக்கற்றார் என்றும், வைஷ்ணவ நூல்களைக்கருத்துடன் அநுமையாகக் கற்றார் என்றும், திருக்கோவலூர் எம்பெருமானர் ஜீயர் மடத்து ஸ்ரீமத். உ. வே. ஸ்ரீநிவாசராமாநுஜ ஸ்வாமிகள் அவரது ஞானகுரு என்றும், எடுத்துரைத்தனர். மேலும் நாவலர் ஸ்வாமிகள் இயற்றிய நூற்களில் 'பாலசம்வாத வினவிடையும், வைராக்ய சூர்யோதயமும், வசனத்தில சிறந்தவை. மேற்படி வைராக்ய சூர்யோதயம் ஸ்ரீமத் பெரிவாச்சான்பிள்ளை யருளிய ''மாணிக்கமாலை'' யின் பொருளைப்பின்பற்றி எழுதியது. மற்றும ஸ்ரீவைஷ்ணவதத்வம் மிகக்கடினமானது. இன்னும் இவரியற்றிய நூல்கள் கணக்கற்றன. சில நூல்களே அச்சாயின. சில பிரதிகளா கவே அச்சாகாமலிருக்கின்றன. சில கரையான்களால் அழிந்து

விட்டினை. இவரது சம்பிரதாய ஞானத்தை இவர் இயற்றிய பாத்மோத்தர புராணத்தால் நன்கறியலாம். இவராலே பலர் வைஷ்ணவர்களாய்ச் சீர்திருத்த மடைந்திருக்கின்றனர். இவருடைய பிரக்யாதியைத் திருவேங்கடமுதல் தென்குமரிவரையி லறியாதாரில்லை. ஆதலினாலே இச்சபை இப்பெரியார் பேர்பெற்றது; என்று பேசி முடித்தார்.

அதன்பின்னர் சென்னை, ஸ்ரீமான் வே. வேங்கடராஜுலு ரெட்டிகாரு நாய்ச்சியார் திருமொழியைக்குறித்துப் பேசினர். அது வருமாறு.—ஸ்ரீமத் ஆண்டாளைத் தெரியாதாரில்லை. நாயகன் தெய்வம். அவர் தம நாயகி நாய்ச்சியார். இவர் திருவரங்கத்துப்பெருமாளை மணந்ததால் 'நாய்ச்சியாரானர். அப்பெருமானை மணப்பதெங்ஙனமென்பது அவர்தம் நூலைப் படித்தலாலேயே தெரியும். புதுவைப்பட்டர் வளர்க்கப்பட்டவர். தந்தையறிவு மகளறிவு போன்று அவ்வழிபற்றிக் கண்ணன்மீது காதல்கொண்டிருந்தார். ஸ்ரீ கிருஷ்ணன் இடைச்சியா அனுபவத்தைப் பாடியிருக்கிறார். நீராட்டித்தையும் அனுபவிக்கிறார். மஹரிஷிகளைக்காட்டிலும் ஆழ்வார்கள் பெரியார்கள். அவர்களைக் காட்டிலும் நாய்ச்சியார் சிறந்தவர். "கோலச்சிற்றுடைகொண்டு நின்ற இக்கன்னியரோமை" என்பதால் சிறு பெண்களோடு கண்ணன் விளையாடினானென்பது மிக்கப்பொருந்தும். தாமும்கூட கண்ணனை மணக்கவேண்டுமென்று விரும்பினர். அதற்கு காமனை வேண்டுகின்றார். காமனோன்பு தைமாதத்திலாகும். "தையொருதிங்கள்" என்றாரம்பிக்கின்றார். கலித்துறையில் தையில் நீராடிய என்று சொல்லப்பட்டது. எக்காரணத்துக்கும் அதற்கேற்றவரை கொள்ளல் வேண்டும். தன்னை அழியமாறியும் உதவிபுரிந்தவன் காமன். தேவர்க்கென்று அமைந்த அமுதம் நாய் நுகாவது தகுமோ? அதுபோல 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில், வாழகில்லேன் மன்மதனே' என்பதால் மானிடனைமணந்திருக்கமாட்டார். அதைச்சார்ந்து குருபரம்பரையோதல், உண்மை விளங்கும். கனவே கினைவாகும். கணவனுகிய கண்ணபிரானையேநினைந்து கனவுகண்ட தாய், பாசுரம் பல இருப்பதால் வேறொருவரை மணந்திருக்க மாட்டார். குயில்

பதிகத்தில் சாமபேத தானதண்டங்கள் அழகாகக் கூறப்படுகின்றன. இவ்வம்மையார் பாசுரத்தில் பெண்பறவையைச்சுட்டியே கூறுகின்றார். ஆடவர் தம் கவியில் ஆண்பறவைகளைக் குறித்திருப்பது நோக்கத்தக்கது. பழமொழிகள் வழக்குச் சொற்கள் நிறையவமைத்துச் சொல்லுகிறார்; எனவும் இன்னும் நாய்ச்சியாரின் உள்ளக் கருத்துக்களையும் மிக தெளிவாக விளக்கி சபையை மகிழ்வித்தார்

பின் சென்னை ஸ்ரீவைஷ்ணவ மகாசங்கத்தின் கிளைச்சங்கமாக இச்சபையிருக்க மகா சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான். வேங்கடசாமி நாயுடுகாரு (B.A; B.L. அட்வோகேட்) அவர்கள் திருமுக மூலம் அனுமதி கோரியபடி அதன் கிளைச்சங்கமாகவிருக்கச் சபை சம்மதித்தது. மேலும், ஏகமனதுடன் சென்னையில் ஸ்ரீவைஷ்ணவ சமாஜத்தாரால் வெளியிடும் அடக்கப்பதிப்பு திவ்யப்பிரபந்த வெளியீட்டையும் ஆதரிக்கத் தீர்மானிக்கலாயிற்று.

பின் கள்ளக்குரிச்சி அன்புநிலைக்கழக ஆசிரியர் ஸ்ரீமான். இராம கிருஷ்ண சடகோபதாஸரால் வெளியிடப்பெறும் நம்மாழ்வார் வரலாறு ஆராய்ச்சியின் புத்தகத்திற்கு உதவிபுரிந்து ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டதற்குச் சபையில் 25 ரூபா வரையில் உதவி செய்து ஆதரிப்பதாகக் கையொப்பம் தந்தனர். பின் தலைவர் அவர்கள் பொருத்தமாக முடிவுரை சொல்லியபின் சபையினரால் மங்களவாழ்த்தும், வந்தனோபசாரமும் அளிக்கப்பட்டன. பின, அன்பு நிலைக்கழக "நம்மாழ்வார்" வரலாறும் 'இருள் ஒளி' யெனும் துண்டுப் பிரசுரமும் விநியோகஞ்செய்ய சபை இனிது முடிவுற்றது.

வெ. கிருஷ்ணராமாநுஜ தாஸர்,
காரியதரிசி,
ஸ்ரீ. ரா. நா. ஸபை, பண்ணுருட்டி.